[1982 பிப்ரவரி 5

செங்கம் தொகுதியில் செயல்புட்டு வரும் ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள்

*வினா எண். 59—திரு. தா. சாமிக்கண்ணு : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் காயம்பட்டு, பூதூர், ஆண்டிபட்டி ஆகிய இடங்களிலுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் ஓலை வேய்ந்த கட்டிடங்களில் செயல்படுவதை மாற்றி அவற்றிற்கு நிரந்தரக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) செங்கம் தொகுதியில் உள்ள காயம்புட்டு, மேல்புழுதியூர், ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு கூடுதல் நிரந்தரக் கட்டிடங்கள், வறட்சி நிவாரணப் பணி மற்றும் ஐந்தாண்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் இவ்வாண்டிலேயே கட்டி முடிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற் கொண்டுள்ளார். பூதூர் என்ற கிராமம் செங்கம் தொகுதியில் இல்லை. மேல் பூதூர் (மேல் செங்கம்பூதூர்) என்ற கிராமம் தான் உள்ளது. அங்கு இருக்கும் ஊராட்சி ஒன்றிய பள்ளி ''ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்'' கூரை வேய்ந்த நிரந்தரக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

திரு. தா. சாமிக்கண்ணு : பேரவைத் தலைவர் அவர்களே, அதன் மதிப்பீடு எவ்வளவு? அது இந்த ஆண்டில் துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிவித்திருக்கக்கூடிய பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 50,000 க்குள் மதிப்பீடு தயார் செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார். 1981–82 ஆம் ஆண்டில் கட்டிடத்தைக் கட்டி முடிப்பதற்குரிய நடவடிக்கைகளை கேற்கொண்டுள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS